# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,**
**தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

ஆணை நாள் 02.11.2020

**முன்னிலை**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 38/B/20**

திரு.P.K.சண்முகம் மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
மொடக்குறிச்சி,
ஈரோடு மாவட்டம். பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (02.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு.P.K.சண்முகம் அவர்கள் அழைப்பினை ஏற்கவில்லை. பொதுத் தகவல் அலுவலர், திரு.K.முருகேசன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மொடக்குறிச்சி, ஈரோடு மாவட்டம் அவர்கள் பங்கேற்றார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 20.11.2019 தேதியிட்ட மனுவில், அறச்சலூர் 'அ' கிராமம், ரீ.சர்வே எண்.126/1,4,6-ன் சிட்டா மற்றும் 1426, 1427, 1428 பசலி ஆண்டு கிராம கணக்கு அடங்கல், ரீ.சர்வே FMB மற்றும் கூட்டுவரைபட ஒளிநகலினைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர்/ கிராம நிர்வாக அலுவலர், அறச்சலூர் அ கிராமம், அறச்சலூர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. மேற்படி மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழ் மேல்முறையீட்டு மனு ஏதும் தாக்கல் செய்யாமல், 12.02.2020 தேதியிட்ட புகார் மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார்.

4. மேற்படி புகார் மனுவின் மீதான இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கும் பொருட்டு 5 நாட்கள் காலஅவகாசம் வழங்கப்பட்டு ஆணையிடப்பட்டது.

5. மேற்படி ஆணைக்கிணங்க பொதுத் தகவல் அலுவலர் ப.மு.2927/2020/அ2 கடிதத்தின் வாயிலாக தகவல் வழங்கியுள்ளாதாக இவ்வாணைய மின்னஞ்சலுக்கு முகவரியிட்டுள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல் போதிய தகவல்கள் என்றும் அவற்றை மனநிறைவுடன் பெற்றுக்கொண்டதாகவும், மேற்படி வழக்கின் மீது எவ்வித நடவடிக்கையும் தேவையில்லை என மனுதாரர் எழுத்துப்பூர்வ வாக்குமூலம் அளித்ததன் அடிப்படையில், இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/-(ரா.பிரதாப்குமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 38/B/20</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
மொடக்குறிச்சி,
ஈரோடு மாவட்டம்.

திரு.P.K.சண்முகம்,
63, பூசாரியூர் மெயின் வீதி,
அறச்சலூர்,
ஈரோடு மாவட்டம் - 638 101.

Copy to: File
MP/PA-06.11.20